**ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனி - 2023**

-----------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஜீஎஸ்எம்பீ தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பிடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள்இ செலவினங்கள்இ சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்க்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளைகளிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்க்கொள்ளப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல்இ அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றினைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதீப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற

தன்மை காணப்படுகின்றதா என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும்.எனது கணக்காய்வு அறிக்கை திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதீப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமம் 17 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் மொத்தம் ரூபா 90,853,735 கிரயமுடைய 1,109 எண்ணிக்கையிலான முழுமையாக பெறுமானத்தேய்வடைந்த நடைமுறையல்லாத சொத்துக்களினை தொடர்ச்சியாக கம்பனி பயன்படுத்துகின்ற போதும் நிதிக்கூற்றுக்களில் அதன் நியாயமான பெறுமதியை முன்வைப்பதற்கு சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் மற்றும் இழிவுப்பெறுமதி என்பவற்றை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் முழு சொத்து வகுப்பும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டுமாயினும் கிரயம், நேரம், மற்றும் மீள்மதிப்பீட்டிலிருந்து நிறுவனத்திற்கு கிடைக்கும் பொருளாதார நன்மைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு கம்பனி இந்த பணிகளினை மேற்கொள்ளவில்லை. மேலும், சொத்துக்களின் கொண்டு செல்லும் பெறுமதி மற்றும் நியாயமான பெறுமதி என்பவற்றுக்கிடையில் குறிப்பிடத்தக்களவு வேறுபாடு இல்லை என்று கருப்படுகின்றது. | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சொத்துக்களின் நியாயமான பெறுமதி முன்வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மன்னம்பிட்டி மணல் செயற்திட்டத்தின் அரச பங்கினுடைய கிரயம் மற்றும் உரிமக் கட்டணங்கள் ரூபா 86,352,396 தொகையாக இருந்த போதிலும், இந்த செலவு ரூபா 8,280,047 தொகையினால் குறைத்து ரூபா 78,072,349 என்று நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டதனால் அதே தொகையியனால் இலாபம் உயர்த்திக்காட்டப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் போது நாங்கள் ஏற்பாடு செய்த மேலதிக ஒதுக்கீட்டினை சரிசெய்தமையே இதற்கு காரணம் ஆகும். | அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட மணலின் உண்மையான அளவின் அடிப்படையில் அரசாங்கத்தின் பங்கினை துல்லியமாக கணிப்பிட்டு பதிவு செய்ய வேண்டும். |
| (இ) | 2022 யூலை 10 ஆம் திகதி முதல் செயல்படாமல் உள்ள கந்தளாய் மணல் அகழ்வுத்திட்டத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக மணல் இருப்பு எதுவும் இருக்கவில்லையாயினும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ரூபா 10,603,916 பெறுமதியுடைய மணல் இருப்பு காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக நிதிக்கூற்றுக்களில் அந்த தொகையினால் இருப்பு அதிகமாகவும் மற்றும் அதே தொகையினால் இலாபம் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. இந்த இருப்பு பற்றாக்குறை காரணமாக இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கந்தளாய் மணல் அகழ்வு செயற்திட்டம் தொடர்பாக குழுவொன்றின் மூலம் ஒரு விஷேட விசாரணை நடத்தப்பட்டது. இந்த விசாரணை அறிக்கையினை தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு, இயக்குனர் சபை மற்றும் சுற்றாடல் அமைச்சு என்பவற்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், இந்த அறிக்கையின் பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டிகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் இருப்புப் பற்றாக்குறையினை சீர்செய்து முன்னோக்கிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | இருப்பு கணக்கெடுப்பின் துல்லியத்தினை சரிபார்த்து நிதிக்கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதோடு இருப்பு பற்றாக்குறைக்கு காரணமான பொறுப்புடைய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்திடமிருந்து பெறவேண்டிய மீதியாக ரூபா 6,679,175 காட்டப்பட்டுள்ள போதிலும் பணியகத்தின் நிதிக் கூற்றுக்களில் பணியகத்தினால் கம்பனிக்கு செலுத்தவேண்டிய எவ்வித மீதியினையும் பிரதிபலிக்கவில்லை. | அரசாங்கத்தின் பகுதியாக மேலதிகமாக செலுத்தப்பட்ட மணல் க்யூப்ஸ்களின் எண்ணிக்கை தொடர்பாக எங்களுக்கு வரவேண்டிய தொகையே இங்கே காட்டப்பட்டுள்ளது. எதிர்கால கொடுப்பனவுகளில் இருந்து இந்த தொகையினை கழிப்பதற்கு பணியகம் உடன்பட்டதுடன், பணியகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் இந்த சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. | இரண்டு நிறுவனங்களின் பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளினை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சேவை முடிவுறுத்தப்பட்ட இரண்டு ஊழியர்களிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் பெறவேண்டிய ரூபா 114,579 தொகையுடைய இடர் கடன் தவணைகள் மற்றும் வட்டியினை அறவிடுவதற்கு இந்த அறிக்கையின் | ரூபா 94,844 கடன் தொகையினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. கடன் தொகையினை எதிரீடு செய்வதற்கு ஊழியருக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடை போதுமானதாகும். | பெறவேண்டிய கடன்கள் மற்றும் வட்டியினை அறிவிடுவதற்கு தேவையான படிமுறைகள் எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | | வேண்டும். |
| (இ) | ரூபா 31,367,131 தொகையுடைய பெறவேண்டிய வியாபர மீதியில், 10 வருடங்களுக்கு மேலாக மொத்தம் ரூபா 4,136,387 தொகையுடைய 86 நிலுவைகளும் மற்றும் 5-10 வருடங்குளுக்கு மேலாக மொத்தம் 6,837,177 தொகையுடைய 78 நிலுவைகளும் காணப்பட்டன. இந்த அறிக்யையின் திகதி வரையிலும் இந்த நிலுவைகளினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த நிலுவைகள் 2024 ஆம் நிதியாண்டினுள் தீர்க்கப்படுவதோடு முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது சில நிலுவைகள் 2023 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளன. | பெறவேண்டிய நிலுவைகளை தாமதமின்றி அறவிடுவதற்கு தேவையான படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 பெறவேண்டியவைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கம்பனியினால் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்திற்கு செலுத்த வேண்டியது ரூபா 1,487,602 தொகையாகும் என்றும் பணியகத்தின் நிதிக்கூற்றில் கம்பனியிடமிருந்து பெறவேண்டிய நிலுவைத்தொகையாக ரூபா 26,928,891 தொகை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 1,487,602 தொகை மன்னம்பிட்டி செயற்திட்டத்துடன் தொடர்புடைய நவம்பர் மற்றும் திசெம்பர் மாதத்திற்காக செலுத்தவேண்டிய கள பரிசோதனை கொடுப்பனவினை பிரதிபலிக்கின்றதுடன் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 26,928,891 தொகை எங்களினால் பணியகத்திற்கு செலுத்தப்படவில்லை. | இரு நிறுனங்களின் செலுத்தவேண்டிய மற்றும் பெறவேண்டிய நிலுவைகளினை விரைவாக தீர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2017-2023 ஆம் காலப்பகுதியில் பல்வேறு செயற்திட்ட சேவைகளினை பெறுவதற்காக 149 நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களினால் மொத்தம் ரூபா 9,688,220 தொகை முற்பணமாக கம்பனிக்கு செலுத்தியுள்ளதுடன் இதில் 5 ஆண்டுகளுக்கு மேல் 3,000,636 தொகையுடைய் 47 எண்ணிக்கையிலான முற்பணங்கள் காணப்பட்டன. இந்த அறிக்கையின் திகதி வரை இந்த முற்பணங்கள் தீர்க்கப்படவில்லை. | 2024 ஜனவரி 11 ஆம் திகதிய GSMBTS/185/15 ஆம் இலக்கமுடைய இயக்குனர் சபை பத்திரத்தின் மூலம் அந்த முற்பண நிதியை வருமானமாக இனங்காண்பதற்கான அங்கீகாரத்தினை பெற்றதுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு மேலதிக மீளாய்விற்காக மீண்டும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. | முற்பணங்கள் சரிபார்க்கப்பட வேண்டும் என்பதோடு சேவைகள் வழங்கப்பட வேண்டுமென்றாலும், சேவைகள் வழங்கப்படாவிட்டாலும் தீர்வு காண நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு | கணிப்பீடு செய்யப்பட்ட பணிக்கொடைகள் சேவை நிறுத்தப்பட்ட நாளிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டுமாயினும் 2023 ஜனவரி 31 இல் சேவை முடிவுறுத்தப்பட்ட புவியியலாளர் ஒருவருக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடையான ரூபா 146,690 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்படவில்லை. | பணிக்கொடை தொகையினை செலுத்துவதற்காக கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. பணிக்கொடை சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடைத் தொகை 30 நாட்களுக்குள் வழங்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சேவை முடிவுறுத்தப்பட்ட திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் பணிக்கொடை செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 செப்தெம்பர் 27 ஆம் திகதிய 01/2021 (ii) ஆம் இல்க்க பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.8 ஆம் பந்தி | (i) சுற்றறிக்கயின் பிரகாரம் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டுமாயினும் கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி 2023 செப்தெம்பர் 15 முதல் நியமிக்கப்பட்டுள்ளார். | நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுற்றாடல் அமைச்சினால் நியமிக்கப்பட்டார். நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி பதவியானது நிரந்தர அடிப்படையில் இணைக்கப்படும் 35 பதவிகளில் ஒன்றாகும், மேலும் இது நிறுவனத்தின் இயக்குனர் சபை மற்றும் தாய் கம்பனியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு நிரந்தர அடிப்படையில் உருவாக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கம்பனியின் பிரதம நிறைவேற்று அதிகாரி நியமிக்கப்பட வேண்டும். |
| | | (ii) தாய் கம்பனியின் இயக்குனர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாக மற்றும் நிதிக் கையேடு பொது தொழில்முயற்சி திணைக்களத்தின் ஒப்புதலுடன் தயாரிக்கப்பட வேண்டுமாயினும் இது வரை தயாரிக்கப்படவில்லை. | பதில்கள் கிடைக்கவில்லை. | பொது தொழில்முயற்சி திணைக்களத்தின் ஒப்புதலுடன் நிர்வாக மற்றும் நிதிக் கையேடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 ஒக்தோபர் 06 ஆம் திகதிய 06/2022 ஆம் இல்க்க பொது | 63 வயதுடைய அதிகாரி ஒருவர் பிரதம நிறைவேற்று அதிகாரியாக ஒப்பந்த அடிப்படையில் 2023 செப்தெம்பர் | நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி சுற்றாடல் அமைச்சினால் நியமிக்கப்பட்டார். | 60 வயதுக்கு மேற்பட்ட அலுவலர்கள் நியமிக்கப்படக் |

| | | | |
|---|---|---|---|
| தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை | 01 இல் நியமிக்கப்பட்டு 2023 ஒக்தோபர் 23 இல் நிரந்தரமாக்கப்பட்டார். | நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி பதவியானது நிரந்தர அடிப்படையில் இணைக்கப்படும் 35 பதவிகளில் ஒன்றாகும், மேலும் இது நிறுவனத்தின் இயக்குனர் சபை மற்றும் தாய் கம்பனியின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு நிரந்தர அடிப்படையில் உருவாக்கப்பட்டது. | கூடாது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 159,733,997 தொகையான இலாபம் இருப்பதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 97,081,603 தொகையாக இருந்தது. ஆகையினால், நிதி விளைவுகளில் ரூபா. 62,652,394 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. செயற்திட்டங்களின் வருமானம் ரூபா 10,536,583 தொகையினால் குறைந்த போதும் ஏனைய செயற்பாடலல்லாத வருமானம் 47,918,464 தொகையினால் அதிகரித்தமையும் மற்றும் நிர்வாக செலவுகள் ரூபா 20,313,497 தொகையினால் அதிகரித்த போதும் செயற்திட்ட செலவினங்கள் ரூபா 45,415,698 குறைவடைந்தமையும் இம்முன்னேற்றத்திற்கான முக்கியக் காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கந்தளாய் பிரதேச சபையின் சூரியபுர கிராம சேவையாளர் பிரிவில் மகாவலி ஆற்றின் பாதுகாப்பு அணையை அச்சுறுத்தும் வகையில் மணல் அகழ்வு மற்றும் ஆற்றங்கரையை பாதுகாக்கும் செயற்திட்டத்தில் தேங்கியிருந்த 103,128 கன மீற்றர் மணலை அகற்றுவதற்கு 2019 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகார சபை பொறுப்பேற்றது. எனினும், 2022 யூலை 10 ஆம் திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை மணல் அகழ்வு நடவடிக்கைகள் எதுவும் செய்யப்படாமல் சம்பளங்கள், கொடுப்பனவுகள், வீட்டு வாடகை மற்றும் பயணக் கொடுப்பனவுகள் என்பவற்றுக்காக ரூபா 4,773,910 தொகை செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்த செயற்திட்டத்தின் கீழ் ரூபா 168,254,363 பாதீட்டில் மகாவலி ஆற்றில் மூன்று அரிப்பு தடுப்புக்களை நிர்மாணிக்க கம்பனி தீர்மானித்ததுடன் ஒரு அரிப்பு தடுப்பு மட்டுமே முடிக்கப்பட்டு மீதமுள்ள 02 | இந்த செயற்திட்டத்திற்கு தேவையான அனுமதியினை அரச நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்வதில் தாமதமும், இலங்கை மகாவலி அதிகார சபையினால் காணியினை பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்படாமையினாலும் மணல் அகழ்விற்காக கோரப்பட்ட மணலின் 53.6 சதவீதமே அகழ்வு செய்யப்பட்டுள்ளதுடன் அரிப்புக் கட்டுப்பாட்டு பணிகள் 75 சதவீதமும் நிறைவடைந்துள்ளன. மேலதிக பணிகளை பூர்த்தி செய்த பிறகு இந்த செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்காக நிறுவனம் உழைத்துள்ளதுடன் அரச நிறுவனங்களிடமிருந்து தேவையான அனுமதியினை பெற்ற பிறகு செயற்திட்டத்தினை | இச்செயற்திட்டத்தின் முறையான திட்டமிடலுடன் விரும்பிய இலக்குகளினை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதோடு அணைக்கு வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் தேவையான நடவடிக்கைகளை உடினடியாக மேற்கொள்ளப்படவும் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரிப்பு தடுப்புக்களின் செயன்முன்னேற்றம் முறையே 75 சதவீதம் மற்றும் 54 சதவீதமாக உள்ளன. இந்த அரிப்புக் கட்டுப்பாட்டு நிரமாணத்தின் ஒப்பந்தக் காலக்கெடு தற்போது கடந்துள்ளதுடன் மண்ணரிப்புக் கட்டுப்பாட்டின் மிகுதி இரண்டும் நிறைவடையாத காரணத்தினால் வெள்ள நிலமைகளின் போது மகாவலி ஆற்றின் அணைக்கட்டு சேதமடையக் கூடும் என்பது அவதானிக்கப்பட்டது. | செயற்படுத்த எதிர்பார்க்கிறது. | |
| (ஆ) | கம்பனியினால் செயல்படுத்தப்பட்ட மூதூர் மணல் செயற்திட்டத்தின் அகழ்வு நடவடிக்கைகள் 2022 ஏப்ரல் மாதம் முதல் நிறுத்தப்பட்டதுடன், மணல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டின் இறுதி வரை சம்பளங்கள், கொடுப்பனவுகள், மின்சாரம், வீட்டு வாடகை போன்றவற்றுக்காக ரூபா 1,569,372 செலவுகள் ஏற்பட்டுள்ளது. | மூதூர் மணல் அகழ்வு செயற்திட்டத்தில் ஏற்பட்டுள்ள முறைகேடுகள் குறித்து நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவு, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவு, சுற்றாடல் அமைச்சு விசாரணைகளை நடத்தி வருகின்றன. அந்த சோதனைகளின் முடிவின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செயற்திட்டத்தின் சரியான திட்டமிடலுடன் விரும்பிய இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டு தொடங்குவதற்கு திட்டமிடப்பட்ட கொடிகம்பொக்க திருவன வைப்பு சுரங்கத் திட்டம் இந்த அறிக்கையின் திகதி வரை ஆரம்பிக்கப்படாமல் ரூபா 24,823,325 செலவு ஏற்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்பு 2017 ஆம் ஆண்டில் ரூபா 2.2 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட தராசுப் பாலம் (Weigh bridge) விளைவற்ற சொத்தாக மாறியதுடன் 2019 ஆம் ஆண்டில் அளவை அளவீடு செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட கம்பனியினால் அதன் மின்னனு பாகங்கள் அகற்றப்பட்டு கம்பனிக்கு திருப்பி அனுப்பப்படவில்லை. | செயற்திட்டத்துடன் துணைபுரியும் நிறுவனங்களுடன் இணைந்து சுரங்க அனுமதிப்பத்திரத்துடன் தொடர்புடைய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2023 ஒக்தோபர் 13 ஆம் திகதியன்று புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திடமிருந்து சுரங்க அனுமதிப் பத்திரம் கோரப்பட்டுள்ளது. | செயற்திட்டம் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டு எடைப் பாலத்தின் மின் உபகரண தராசு மீட்கப்பட வேண்டும். . |
| (ஈ) | மன்னம்பிட்டி மணல் அகழ்வுத்திட்டத்திற்கு சொந்தமான ரூபா 8,883,520 பெறுமதியுடைய ஏற்றும் இயந்திரம் (loader machine) 2017 யூலை 16 முதல் செயலிழந்துள்ளதுடன், மற்றும் இயந்திரம் பழுதுபார்க்கப்பட்டு பாவனைக்கு உட்படுத்தப்படாமல் அல்லது அகற்றப்படாமல் இருந்தது. | 2023.10.23 ஆம் திகதியில் இடம்பெற்ற சபைக் கூட்டத்தில் இந்த ஏற்றும் வாகனத்தினை பழுதுபார்க்க அல்லது பொருத்தமான கொள்முதல் முறைமை ஊடாக விற்பனை செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, 2024.03.26 இல் ஏற்றும் வாகனத்தின் தற்போதைய சந்தை விலை தொடர்பான மதிப்பீட்டினை அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து | இயந்திரம் பழுதுபார்க்கபட்டு பயன்படுத்தப்பட வேண்டும் அல்லது அகற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கோரப்பட்டது. கம்பனி பிராந்தியத்திற்கு தெரிவிக்கப்பட்டு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்று இந்த திணைக்களம் 2024.04.05 ஆம் திகதியன்று தொலைபேசி ஊடாக தெரிவித்தது. | |
| (உ) | ரூபா 104,650 மற்றும் ரூபா 567,000 கிரயமுடைய ஒழு மோட்டார் சைக்கிள் மற்றும் ஒரு கோப்புறையினை 2014 முதல் காணாமல் போனது என கம்பனி கண்டறிந்த போதிலும் அதற்கு காரணமான தரப்பினரை அடையாளம் காணப்படவில்லை என்பதுடன் நட்டத்தினை மீட்டெடுப்பதற்கு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | காணாமல் போனதாக அறிக்கையிடப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் கோப்புரை தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை வழங்குவதற்கு உள்ளக குழவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி அறிக்கை முகாமைத்துவத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு தேவையான உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். | சொத்துக்களின் இழப்பிற்கு காரணமான தரப்பினர்களினை இனங்கண்டு இழப்பினை ஈடுகட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரத்திணபுர மாவட்டத்தின் பலாங்கொடை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ரஜவக ஒதுக்கத்தில் உள்ள கால்சிட் படிமத்தினை அகழ்வாராய்ச்சி செய்து பெறுமதி கூட்டி ஏற்றுமதி செய்து உள்நாட்டில் பயன்படுத்தும் நோக்குடன் பேராதனை பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டப் படிப்பு நிறுவனத்துடன் இணைந்து 2020 ஆம் ஆண்டில் இருந்து செயற்திட்டமொன்றினை திட்டமிட்டது. பட்டப் படிப்பு விஞ்ஞான நிறுவனத்திற்கு மதியுரை சேவைக்கட்டணம், போக்குவரத்து, பயண செலவுகள், கூட்டுக் கொடுப்பனவு சோதனைக் கட்டணம் போன்றவற்றுக்காக கம்பனி ரூபா 3,304,612 தொகையினை செலவிட்டதுடன், இந்த செயற்திட்டத்தினை கைவிட்டது. | நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இச்செயற்திட்டம் தொடர்பில் செலவளிக்கப்பட்ட செலவுகள் முற்றிலும் நிறுத்தப்பட்டு செயற்திட்டத்தின் உண்மையான செலவு குறித்து ஆராய்வதற்கு குழவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இச்செயற்திட்டம் குறித்து முறையாக ஆய்வு செய்யாமல் செயற்திட்டத்தினை ஆரம்பித்தமை தொடர்பிலும், செயற்திட்டத்தினை நடத்திய நபர்கள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கந்தளாய் சிறிமங்களபுரயில் மணல் விற்பனை ஆரம்பிப்பதற்காக 2023 யூன் மாதத்தில் இருந்து 06 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டு சம்பளங்கள் மற்றும் கூலிகள், எரிபொருள், வீட்டு வாடகை, நலன்புரி, மின்சாரம் போன்றவைகளுக்காக ரூபா 1,764,297 | கந்தளாய் செயற்திட்டம் குறித்து 2023 மே 29 திகதியன்று இடம்பெற்ற இயக்குனர் சபைக்கூட்டத்தில் பொறுப்பான அமைச்சரினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்படுவது குறித்து ஆலோசிக்கப்பட்டதுடன் 2023 யூலை | முறையாக ஆய்வு செய்யாமல் செயற்திட்டத்தினை தொடங்கிய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவளிக்கப்பட்டும் 2024 ஜனவரி மாதத்தில் செயற்திட்டத்தினை கைவிடுவதற்கு தீர்மானித்ததன் காரணமாக ஏற்பட்ட செலவுகள் வீணடிக்கப்பட்டது. | 01 ஆம் திகதியில் இருந்து செயற்பாடுகளினை ஆரம்பிப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. செயற்திட்டத்திற்கு தேவையான சட்டப் பின்னணியைத் தயாரிப்பதில் காணப்பட்ட தாமதத்தினால் செயற்திட்டத்தினை ஆரம்பிக்க இயலாமை குறித்து 2024 ஜனவரி 26 ஆம் திகதி இயக்குனர் சபைக்கு அறிக்கையிடப்பட்டதன் பின்னர் செயற்திட்டத்தின் பணிகளை முடிவுறுத்துவதற்கு இயக்குனர் சபை அறிவுறுத்தல்கள் வழங்கியது. | |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனி ஒப்பந்த அடிப்படையில் செய்தித்தாள் விளம்பரம் ஊடாக சந்தைப்படுத்தல் மற்றும் திட்டமிடல் பதவிகளுக்காக விண்ணப்பங்களினை அழைத்து, 2023 செப்தெம்பர் 19 ஆம் திகதியன்று நேர்முகப்பரீட்சையினை நடத்தியது. எனினும், கணக்காய்வு திகதியான 2024 பெப்ரவரி 08 ஆம் திகதி வரையிலும் கம்பனி மேற்படி பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால், இந்தப் பதவிக்காக திட்டமிடல் முகாமைத்துவ பதவி என அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கட்டடைமைப்பில் உள்ளடக்கப்படாத ஒரு பதவி உருவாக்கப்பட்டு ஏற்கனவே சேவையில் உள்ள ஊழியர் ஒருவர் 2023 ஒக்தோபர் 09 ஆம் திகதியன்று நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட்டதுடன் இயக்குனர் சபையின் அனுமதி பெறப்படாமல் நியமனம் செய்யப்பட்டது. | நேர்முகப்பரீட்சை நடத்திய நேரத்தில், இயக்குனர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நிறுவனத்தின் ஆட்சேர்ப்பு திட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு நிறுவனத்தின் தேவைக்கு ஏற்ப திருத்தப்பட்ட மதிபெண் தாள் நேர்காணலுக்கு பயன்படுத்தப்பட்டது. நிறுவனத்தின் கிரய முகாமைத்துவ நோக்கங்களினை கருத்திற் கொண்டு சந்தைப்படுத்தல் முகாமைத்துவ பதவிக்காக நியமனம் வழங்குவது தேவையற்றதாக கருதப்பட்டதுடன், நிறுவனத்தின் திட்டமிடல் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய பொறுப்புக்கள் திட்டமிடல் அல்லது ஒருங்கிணைப்பு முகாமையாளரால் கையாளப்படுகின்ற அதே சமயத்தில் சந்தைப்படுத்தல் திணைக்களத்தின் ஏனைய நடவடிக்கைகள் தொழில்நுட்ப இயக்குனரால் மேற்பார்வை செய்யப்படுகிறது. | இயக்குனர் சபையின் அங்கீகாரம் பெறாமல் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் தவிர ஏனையவைகளுக்கு நியமனங்கள் வழங்கப்படக் கூடாது. |
| (ஆ) | 2023 ஒக்தோபர் 09 ஆம் திகதியன்று கம்பனி 35 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் போது சகல உள்ளக ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்களினை கோராமலும் மற்றும் அவர்களினை நேர்முகப் பரீட்சை குழு மூலம் மதிப்பீடு செய்யாமலும் நிரந்தரமாக நியமித்தது. மேலும், 2008, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட தகுதியான ஊழியர்களினை அந்த நிரந்தரமாக்கப்பட்ட பட்டியலில் சேர்க்கப்படவில்லை. மாறாக, பின்னைய ஆண்டுகளில் ஒப்பந்த | நிறுவனத்திற்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக 39 பதவிகளுக்கு நிறுவனத்தின் இயக்குனர் சபை மற்றும் நிர்வகிக்கப்பட்ட கம்பனி என்பன அங்கீகாரம் வழங்கியது. அதன்படி, அந்த நேரத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய ஊழியர்களுக்கு அவர்களின் செயற்திறனை மதிப்பீடு செய்யப்பட்டு அந்த 35 பதவிகளுக்கு அந்த ஊழியர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டனர். | ஊழியர்களினை நிரந்தரமாக்கும் போது கல்வித் தகைமை மற்றும் வேலை அனுபவம் என்பவற்றை சரியாக உறுதிப்படுத்த முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதோடு இதன்போது தவறான தகவலை வழங்கிய ஊழியர்களுக்கு எதிராக |

| | | |
|---|---|---|
| அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். முறையான செயல்திறன் மதிப்பீட்டு செயன்முறை மேற்கொள்ளப்பட்டு நேர்முகப்பரீட்சை ஊடாக அந்த ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்று குறிப்பிடப்பட்டது. எனினும், 2023 செப்தெம்பர் 21 இல் இடம்பெற்ற 182 வது இயக்குனர் சபை கூட்டத்தின் போது நேர்முகப்பரீட்சை நடத்தப்படாமல் இந்த நியமனங்களுக்காக சபை அங்கீகாரம் வழங்கியது. | | ஒழுக்க நடவடிகககை எடுக்கப்பட வேண்டும். |

4. **கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்**

4.1 **வருடாந்த செயல்திட்டம் மற்றும் செயல்திறன்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் செயற்பாட்டுத் திட்டத்தில் கம்பனியின் மனித வள திணைக்களம், சந்தைப்படுத்தல் திணைக்களம் மற்றும் திட்டமிடல் திணைக்களம் என்பவற்றின் வகிபாகங்கள் உள்ளடக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் மேற்குறிப்பிடப்பட்ட துறைகளுக்காக செயல்திட்ட நடவடிக்கையினுள் தொடர்புடைய பொறுப்புக்களினை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிறுவனத்தின் சகல துறைகளிலும் பங்களிப்பினை உள்ளடக்கி செயல்திட்ட நடவடிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கம்பனி மணல் விற்பனை மூலம் ரூபா 2,417,000,000 தொகையையும், அகழ்வாராய்ச்சி மற்றும் புவியியல் செயற்திட்டங்களில் மூலம் ரூபா 159,000,000 தொகையையும் விற்பனை இலக்காக நிர்ணயித்த போதிலும் உண்மையாக ஈட்டப்பட்ட வருமானம் முறையே ரூபா 27,316,991 மற்றும் ரூபா 62,797,518 தொகையாகும். இது அந்த இலக்கு வருமானத்தில் முறையே 1.1 சதவீதம் மற்றும் 39.5 சதவீதத்தினை மாத்திரம் பிரதிபலிக்கின்றது. கம்பனி வருமானத்தினை அதிகரிப்பதற்கு தந்திரோபாயங்களினை கண்டறியவோ அல்லது சந்தைப்படுத்தல் திட்டத்தை உருவாக்கவோ இல்லை. | பொருளாதார நெருக்கடி, இயக்குனர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் அம்புத்தளை மணல் விற்பனை நிலையத்தை மூடியமை, எரிபொருள் மற்றும் கட்டுமான மூலப்பொருட்களின் கிரயங்கள் அதிகரித்தமை, மணல் விற்பனை நிலையங்களை சுற்றி தனியார் மண் விற்பனை நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கியமை போன்ற பல்வேறு காரணிகளினால் இலக்கினை அடைந்து கொள்வதற்கு சவாலாக இருந்தது. | நடைமுறை சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு வருமானத்தினை அதிகரிப்பதற்காக தந்திரோபாய சந்தைப்படுத்தல் திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டும். |